# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

ஆணை நாள் - 17.04.2025

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 19232/SCIC/2023**

திரு கந்தசாமி — மேல்முறையீட்டாளர்
எண்.55.1-1, உதயா நகர்
HGO காலனி,
பாளையங்கோட்டை
திருநெல்வேலி - 627 007.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
காவல் கண்காணிப்பாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்ககம்
எண்.293, M.K.N.Road ...... பொதுஅதிகார அமைப்பு
ஆலந்தூர், சென்னை-600 016.

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 22/08/2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு (ம) கண்காணிப்புத் துறை இயக்குநர் அலுவலகம், ஆலந்தூர், சென்னை-16-க்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "பொருள்:திருநெல்வேலி ஊழல் தடுப்பு கண்காணிப்புத்துறை Detachment அலுவலகத்தில் புரோக்கர்கள் மூலம் லஞ்சப்பணம் மாமூலாக பெற்று கொடிக்கம்பம் அமைத்தது / அலுவலக எல்கையை சுற்றி கம்பி வேலி அமைத்தது / அலுவலக வளாகத்திற்குள் பள்ளங்களை டாரஸ் மூலம் அரசு அனுமதி இன்றி சரள் அடித்து நிரப்பி மரம், செடி வைத்தது - தொடர்பாக - நான் 02/06/2023 அன்று நடவடிக்கை எடுக்க கேட்டு

அனுப்பி வைத்த புகார் மனு இயக்குநரகத்தில் நடவடிக்கைக்காக பதிவு செய்யப்பட்ட" என்பன போன்று 11 (பதினொன்று) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

2. பின்னர், மனுதாரர்/மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 30/09/2023 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவினை அனுப்பியுள்ளார். பொதுத்தகவல் அலுவலர்/ காவல் கண்காணிப்பாளர், வடக்கு சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்ககம், சென்னை-16 அவர்கள் மனுதாரருக்கு எண்.36567/விஏசி/2023/த.அ.உ.ச. நாள் 17/10/2023 வாயிலாக தகவல்களை அனுப்பியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர்/ மேல்முறையீட்டாளர் 02/11/2023 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 19232/SCIC/2023 ஆக பதிவு செய்தது. அதன் பின்னர், பொதுத் தகவல் அலுவலர்/ காவல் கண்காணிப்பாளர், வடக்குச் சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்ககம், சென்னை-16 அவர்கள் மனுதாரருக்கு எண்.36567/விஏசி/2023/த.அ.உ.ச. நாள் 06/11/2024 வாயிலாக தகவல்களை அனுப்பியுள்ளதோடு, அதன் விவரத்தை ஆணையத்திற்கும் தெரிவித்துள்ளார். அதன் பின்னர், மனுதாரர், 05/12/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபணை மனு அனுப்பியுள்ளார்.

3. இந்நிலையில், இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது காணொளி காட்சி வாயிலான விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 17/04/2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய விசாரணைக்கு, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆஜராகுமாறு மனுதாரருக்கும், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் நேரில் ஆஜராகுமாறு பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

**4. இன்று ஆணையத்தின் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு மனுதாரர் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து கலந்து கொண்டார். பொது அதிகார அமைப்பின் சார்பில் ஆணையத்தின் முன் திரு.V.சரவணக்குமார், காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்ககம், ஆலந்தூர், சென்னை-16 அவர்கள் ஆஜராகி, மனுதாரருக்கு 17/10/2023 மற்றும் 06/11/2024 தேதியிட்ட கடிதங்களின் வாயிலாக பதில் அனுப்பப்பட்டது என்றும் அதில் மனுதாரரின் 02/06/2023 தேதியிட்ட புகார் கடிதத்தின் மீது விசாரணை நடத்தியதன் அடிப்படையில், அப்புகார் சரியானதல்ல, நிரூபிக்கப்படவில்லை என்பதால் அப்புகார் முற்றாக்கப்பட்டது என்ற தகவலை மனுதாரருக்கு அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். இன்றைய விசாரணையின் போது, மனுதாரர் தெரிவிக்கையில், பொதுத் தகவல் அலுவலர், முற்றாக்கம் செய்யப்பட்டது என்று பதில் மட்டுமே அனுப்பியதாகவும், புகார் முறையாக நிரூபிக்கப்படவில்லை என்பதற்கான விசாரணை அறிக்கை தனக்கு வழங்கப்படவில்லை என்றும், எனவே, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்ககத்தின் பொதுத் தகவல் அலுவலர், விசாரணை அறிக்கையின் நகலை தனக்கு வழங்க ஆணையம் அறிவுறுத்துமாறு கோரினார். அதற்கு பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு புகாரின் மீது முடிவு பற்றி மனுதாரருக்கு ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டுவிட்டதாகவும், இவ்வழக்கின் விசாரணை அறிக்கை வழங்கினால், இயக்ககத்திற்கு அதுவே பெரிய வேலைப்பளுவாக மாறிவிடக் கூடிய சூழல் ஏற்படும் என்றும், ஏனெனில், தினமும்**

**நிறைய விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்றும் அதற்கான விசாரணை அறிக்கைகள், வாக்குமூலங்களின் நகல்களை ஒவ்வொரு மனுதாரருக்கும் வழங்க வேண்டுமென்றால் அதுவே ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்ககத்திற்கு, பெரும்பாலான வேலை நேரத்தை எடுத்துக் கொள்ளும் எனத் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலரின் வாதுரையை ஆணையம் பதிவு செய்து ஏற்கிறது. மனுதாரருக்கு விசாரணை அறிக்கையின் முடிவினை / பதிலினை ஏற்கெனவே பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்டுவிட்டது. அந்த பதிலில் மனுதாரர் மனநிறைவு அடையவில்லை எனில், துறையின் உயர் அதிகாரிகளை அணுகுமாறு மனுதாரருக்கு ஆணையம் அறிவுறுத்துகிறது. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

ஒம்./-(**முகம்மது ஷகீல் அ்ஃதர்**)
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

## <u>வழக்கு எண். SA 19232/SCIC/2023</u>

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
காவல் கண்காணிப்பாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்ககம்
எண்.293, M.K.N.Road
ஆலந்தூர், சென்னை-600 016.

**மேல்முறையீட்டாளர்**

திரு கந்தசாமி
எண்.55.1-1, உதயா நகர்
HGO காலனி,
பாளையங்கோட்டை
திருநெல்வேலி - 627 007.

RG/PC